crushing had to be parked in a line without unloading due to the absence of one of the loading Mazdoors. Thus, there was concerted stoppage of work in each and every section of the Factory.

The Labour Officer, Tiruchirappalli, who visited the factory on the 7th, also saw some batch of fitters in Kiln section sitting idle without attending to the work. Some of the workers also seem to have stated that they were prevented from doing work. Despite the advice of the Labour Officer, the workers continued to remain idle without doing normal work.

Both the Dalmia Cement Workers' Union, Dalmiapuram, and the Dalmia Industries Workers' Union, Dalmiapuram, were also telegraphically advised by the Commissioner of Labour on the 6th and 8th February 1958 to work normally, without detriment to normal production pending enquiry by the Labour Officer into their grievances, if any. This also did not improve the situation.

As a result, there has been complete cessation of work from 10 a.m. on the 8th February in the Factory, Quarry and other allied Departments. The situation is however calm and peaceful. Since this Statement was prepared, I understand that the Union and the Management are carrying on negotiations and the situation is slowly returning to normalcy.

The Government are carefully watching the developments and will assist the parties to resolve their differences peacefully.

III.—PRIVILEGE MOTION *RE* : MISREPRESENTATION IN THE PRESS OF A MEMBER'S SPEECH.

1–50 p.m. **Mr. SPEAKER :** கனம் அங்கத்தினர் அன்பழகன் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னையை எழுப்ப விரும்புகிறார்கள். அவர்கள் என்ன பேசவேண்டுமோ அதைச் சுருக்கமாகப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* **Sri K. ANBAZHAGAN :** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட மன்றத்தில் கடந்த 3-ம் தேதி நிதி நிலை அறிக்கையைப் பற்றிய விவாதத்தில் நான் கலந்து கொண்டு பேசிய பேச்சின் கருத்துக்களை, உண்மைக்கு மாறாகவும், நீதிக்குப் புறம்பாகவும் ஒரு பத்திரிகையில் வெளியிட்டு இருக்கிறார்கள். நான் அங்கே பேசிய கருத்துக்களுக்கு மாறான எண்ணத்தைப் பொது மக்களிடத்தில் தோற்றுவிக்கவும், என்னுடைய கருத்துக்களிலே பொதுமக்கள் குறை காணவும், அந்தப் பத்திரிகை வழி செய்திருக்கிறது. அதைப்பற்றிய செய்தியைத் தங்களிடத்தில் தெரிவிப்பதின் மூலமாக தக்க ஒழுங்கு நடவடிக்கையை " Privilege Committee " மூலமாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது குறித்து மேலும் பேசுவது அவசியம் இல்லை என்று கருதுகிறேன். பதிவு செய்யப்பட்ட பேச்சையும், பத்திரிகையில் வெளி வந்த செய்திகளையும் நான் தலைவர் இடத்தில் தந்திருக்கிறேன். தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி வெளியிட்ட பத்திரிகை " ஜனசக்தி " நாள் இதழ். அந்த இதழில் வந்துள்ள செய்தி என்னுடைய பேச்சுக்கு முற்றிலும் முரணானது, மாறுபட்ட கருத்தைத் தந்திருக்கிறது. இதுபற்றி தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

Mr. SPEAKER : இந்த **Motion** என்னிடத்தில் இப்பொழுது தான் வந்தது. அதை யோசித்து நாளைக்கோ அல்லது நாளை மறுதினமோ பதில் அளிக்கிறேன்.